மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

திருவெண்ணெய்நல்லூர்.

2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ம் நாள் வியாழக்கிழமை

*******

திரு.ரெ.செந்தில்குமார், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | ராமலிங்கம் | **அசல் வழக்கு எண்.** | - | 98/2024 |
| த/பெ. | - | | **வாசா.** | - | 1 |
| வயது | - | | | | |
| கிராமம் | - | | | | |
| வட்டம் | - | | | | |
| தொழில் | - | | | | |

12.02..2026

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. தாவா சொத்தில் பல ஜாதி மரங்கள் உள்ளதாக சொல்லியுள்ளேனே, அது எந்த எந்த மரங்கள் என்று சொல்லவில்லை என்றால் கேட்கல, சொல்லவில்லை. கூரை வீடு கீழகமாக உள்ளதால் வேறு இடத்திற்கு போக வேண்டும் என்று பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ளேனே, அது எப்போது கீழகமானது என்றால் கீழகமாகவில்லை, வீடு அப்படியே தான் உள்ளது, நான் புறம்போக்குக்கு போய்விட்டேன், இதில் வந்து அவர் கேட்டார்.

2. நான் புறம்போக்குக்கு போய்விட்ட பிறகு என்ன வந்து கேட்டார் என்றால் நான் கொஞ்ச நாளில் வீடு கட்டிட்டு போய்விடுகிறேன் , அதுவரை இருக்கிறேன் என்று கேட்டார், நான் விட மாட்டேன் என்று சொல்லிவிட்டார். அவ்வாறு எந்த வருடத்தில் கேட்டார் என்று பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் 2015 ல் கேட்டார். இதை காண்பிக்க எழுத்து பூர்வமான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

3. அவர் என்ன கேட்ட பிறகு நான் என்ன செய்தேன் என்றால் 2-3 முறை கேட்டார், தம்பி என்ற முறையில் சரி என்று விட்டுவிட்டேன். அதற்கு பின்பு அவரை காலி பண்ண சொன்னேனா என்றால் 2017 ல் காலி செய்ய சொல்லி கேட்டேன், நான் பண்ண மாட்டேன் என்று சொல்லிவிட்டார். 19.10.1995 , 16.11.1995 ஆண்டும் எனது தம்பி என்னிடம் பாகம் கேட்ட போது நான் அவரை கத்தியால் குத்தி திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் புகார்

கொடுத்து என்னை போலீசார் என்னை கைது செய்தார்கள் என்றால் இல்லை.

4.இதன் பிறகு ஊரில் பஞ்சாயத்து நடந்த போது இரு தரப்பும் ஒத்துக்கொண்டு ஒரு உடன்படிக்கை எழுதிக்கொடுத்தோம் என்றால் பஞ்சாயத்து பேசவும் இல்லை, நான் போகவும் இல்லை. 1995 ல் ஒரு பாக பத்திரம் எழுதி அதில்சாட்சிகள் முன்னிலையில் ராமலிங்கம் என பெயரை எழுதி கையெழுத்து போட்டேன் என்றால் இல்லை, பஞ்சாயத்தே பேசவே இல்லை. அதன் படி 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தின் 1, 2 அயிட்டங்களும், எனக்கு வேறு அயிட்டங்களும் ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. அந்த ஆவணத்தில் ஒத்ததுக்கொண்டு கையெழுத்து போட்டுவிட்டு தற்போது பொய்யாக சொல்கிறேன்என்றால் சரியல்ல.

5. அந்த ஆவணத்தை அனுசரித்து 1ம் பிரதிவாதி குடியிருந்து அனுபவித்து வருகிறார் என்றாலும், மின் இணைப்பு எண் 366 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் இல்லை. அதன் பின்னிட்டு பட்டா, சிட்டா, அடங்கல் உட்பட 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் இல்லை. அதன் பேரில் எந்த ஆட்சேபணையும் நான் செய்யவில்லை என்றால் நான் சொன்னேன், பல முறை கிளம்ப சொல்லி சொன்னேன், கேட்கவில்லை, அதனால் கோர்ட்டில் கேஸ் போட்டுவிட்டேன்.

6. என் பெயரில் உள்ள சொத்தை ராவுத்தர் பாய்க்கு கிரையமும், எனது பிள்ளைகள் பெயரில் செட்டில்மெண்டும் எழுதி வைத்துவிட்டேன் என்றால் இல்லை, சொத்து என் பெயரில் இல்லை. பஞ்சாயத்தின் படி தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டு, எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகளை எனது பிள்ளைகளுக்கு செட்டில்மெண்டும், மற்றவர்களுக்கு கிரையம் எழுதிகொடுத்துவிட்டு, இத்தனை வருடம் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் இல்லை. எனது வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் நாளது வரை பாகம் பிரியவில்லை என்றும், அவருக்கு இதர சொத்தில் மீதி பாகம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் பாகத்திற்கு வேலை இல்லை, எனது பொண்டாட்டி நகையை விற்று வாங்கினேன்.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.